# சுருஷ்டியும் அதன் இழப்பும்
## ஆதி = 1 – 3

பாடம் – 1

எலோஹிம் elohiym (el-o-heem) என்ற வார்த்தை எலோ வ ஹ (elowahh) என்ற வார்த்தையின் பதம் பன்மையின் ரூபம் கொண்டது. இது தேவன் (God) என்ற ஆங்கிலத்தில் மொழிப் பெயர்க்கப்பட்டது. வானமும் பூமியும் உண்டாக்கிய பொழுது பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் இவர்கள் ஒன்றாய் இணைந்து செயல்புரிந்தார்கள் ஆதியாகமம் 1: 1–3 வசனங்களில் காணலாம்.

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார், பூமியானது ஒருங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது. ஆழத்தின்மேல் இருள் இருந்தது தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார். தேவன் வெளிச்சம் உண்டாக்கடவது என்றார். வெளிச்சம் உண்டாயிற்று. என்று ஆதியாகமம் 1 : 1–3 வசனங்களில் சொல்லப்படுகிறது. யோவான் 1:1–3 வசனத்தில் ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று என்று சொல்லப்பட்டது. ஆரம்பத்தைக் குறித்து தேவன் மனிதனுக்கு எதை வெளிப்படித்தினாரோ அது மாத்திரம் தான் நமக்குத் தெரியும். மேதைகளின் முறைமைகளின்படி பூர்ணமாக உண்மை தன்மையை நிரூபிக்கப்படவில்லை பிறகு அவைகளை தேவன் வெளிப்படுத்தின காரியங்களுக்கு மாறாக உள்ளன.

சிருஷ்டி உண்டாகிக் கொண்டிருக்கிற கடைசி நாள் அதாவது ஆதியாகமம் = 1:26–27 வசனத்தில் இப்படியாக சொல்லப்படுகிறது. தேவன் – நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும் மிருக ஜீவன்களையும் பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப்பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் சிருஷ்டித்த மற்றக் காரியங்களைவிட இது. வேறுபாடானது. ஏனென்றால் மனுஷனை அவருடைய சாயலிலும், அவருடைய ரூபத்தின்படியும் உண்டாக்கினார். ஆனாலும் மனுஷன் தேவனுடைய உண்மையான நகல் அல்ல ஏனென்றால் மனுஷன் இரத்தமும் மாம்சமாக கொண்டுள்ளான். ஆனால் தேவன் ஆவியின் தன்மையாயிருக்கிறார்.

தேவன் தன் அனைத்து சுருஷ்டியின் மத்தியில் வைத்து, இதை ஆண்டுக்கொண்டு, கீழ்ப்படுத்தி, பண்படுத்தி மற்றும் இதைக்குறித்து ஜாக்கிரதையாய் காத்துக் கொண்டிரு என்று ஆதாமிடம் தேவன் சொன்னார். பிறகு தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தில் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். ஆதியாகமம் = 2: 16,17

ஸ்திரீ அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்பட்டதக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான். ஆதியாகமம் = 3 : 6.

அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும். யாக்கோபு = 1:14,15

அந்த கனி ஏவாளுக்கு பார்வைக்கு இச்சிக்கத்தக்கதாக காணப்பட்டது. புத்தியை தெளிவிக்கிறதற்கு விரும்பினாள். ஆனால், அவர்கள் புத்தியின்மையினாலே வெட்கப்படதக்கா ஆனார்கள். இந்த தருணத்தில் அதன் (விளைவு) காரியத்தில் உடனே காணப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் தேவனுடைய தீர்ப்பு எதிர்கொள்ளும்போது ஒருவனுக்கு அந்த பாவம் காணப்படும். அவர்கள் பரதீசு போன்ற ஸ்தலம் ஏதேனிலிருந்து வேர்ப்படுத்தப்பட்டு கவலையும் துக்கமும் உள்ள இடத்திற்கு என்றால் பூமியின்மீது அனுப்பட்டார்கள். இந்த முதல் மனுஷர்களுடைய கட்டளை மீறுதல் என்றால் பாவத்தினாலே மனுஷனுக்கு இழப்பு ஆரம்பமாயிற்று. கனியை புசித்தால் நிச்சயமாகவே சாகவே சாவாய் தேவன் சொன்ன வார்த்தையின்படி அவர்கள் கனியை புசித்த உடனே தேவனின் சாயலை கொண்ட அவர்களின் ஜீவ ஆத்துமாவை இழந்து மரித்தார்கள். அதற்கு கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டு மிருகங்களிலும் சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய். நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய், உனக்கும் ஸ்திரீக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிகாலை நசுக்குவாய் என்றார். அவர் ஸ்தீரியை நோக்கி, நீ கர்ப்பவதியாயிருக்கும்போது, உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன். வேதனையையோடே பிள்ளை பெறுவாய். உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான் என்றார். பின்பு அவர் ஆதாமை நோக்கி, நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும், நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதில் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும், வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய். நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால் நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய். நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார். ஆதியாகமம் : 3 : 14-19.

இந்த பாவத்தினாலே ஆதாமும், ஏவாளும் இருவரும் தேவனிடத்திலிருந்து வேறுபடுத்தப்பட்டார்கள் பிறகு அவர்களுக்கு திரும்பி தேவனோடு ஐக்கியம் கொண்டு சமாதானத்தோடு வாழ வாய்ப்பு தேவையில் இருந்தார்கள். அவர்கள் சமாதானப்படுத்தும்படி அவர்களின் கீழ்ப்படியாமைனால் வந்த பாவத்திற்கு பரிகாரம் ஒரு பூரண தேவைப்பட்டது. ஆகையால் முதல் மனுஷனுடைய முதல் பாவம் மனுஷர்களுக்கு சாபமாய் மாறின. மனுஷர்களுக்கெல்லோரும் தேவன் பக்கம் திரும்பி சேரும்படிக்கு ஒரு பரிசுத்தமும் பூரணமானதுமான பலி தேவைப்பட்டது.

## கேள்வி :

1. நன்மை, தீமை புத்தி தெளிவிக்கிற கனியை புசிக்க வேண்டாம் என்று தேவன் ஆதாமுக்கு கட்டளையிட்டார்.

1. .....................ஆம்
2. ..................... இல்லை

2. ஆதாம், போன்ற அவர் மூலமாய், சிருஷ்டிக்கப்பட்ட மனிதர்களெல்லோரும்,

.............. சரியாய் தேவனைப்போன்றவர்
.............. சுவாசிக்கிற ஜீவராசிகள்
.............. தேவனின் சாயலில் உள்ளவர்கள்

3. நன்மை தீமை தெளிக்கிற விருட்சத்தின் கனி புசிக்க வேண்டாம் என்று ஏவாளுக்குத் தெரியவில்லை.

.............. ஆம்
.............. இல்லை.

4. தமது சாயலில் சுருஷ்டிக்கப்பட்ட மனிதர்கள் கீழ்ப்படியாமையினாலே தேவன் அவர்களின்மேல் விசனப்பட்டார்.

.............. ஆம்
.............. இல்லை.

5. ஏவாள் விலக்கின கனியை புசிக்கச் சொல்லும்போது, தனக்கென்று தேவன் சிருஷ்டிக்கப்பட்டதால், ஆதாமுக்கு வேறு வழியில்லாமல் போயிற்று.

.............. ஆம்
.............. இல்லை.

## ஆதி மனுஷர்கள்
## ஆதியாகமம் 4 - 6

### பாடம் - 2

### ஆதாம் மற்றும் ஏவாள்

நன்மை தீமை புத்தி தெளிவிக்கிற விருட்சத்தின் கனி புசிக்கவேண்டாம் என்று தேவன் அவர்களுக்கு கொடுத்த முதல் கட்டளை, தேவனின் சிருஷ்டிப்பில் முதல் மனிதர்கள் ஆதாம் – ஏவாளும் அந்த கட்டளை ஏவாளுக்கு தெரிந்திருந்தும் இச்சைனாலே இழுக்கப்பட்டு அந்த கனியைத் தின்றால். பிறகு ஆதாமுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான் சர்ப்பவடிவில் உன்ன பொல்லாங்கன் பாவம் செய்யும்படி அவர்களை ஏவினால். இந்த சம்பவத்தினால் நடந்த அவர்களின் கீழ்படியாமையினால் பரதீசு போன்ற ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்படுவதும் மற்றும் அவர்களின் பாவத்தினால் அவர்களுக்கு நேர்ந்த மற்ற சோதனை என்கிற விளைவுகளும் அனுபவித்தார்கள். இந்த விளைவுகளின் காரணமாக தேவனிடத்திலிருந்து பிரிவு, கஷ்டம், மற்றும் மரணமும் நேர்ந்தது.

முதல் குடும்பத்தில் அவர்களுக்கு நேர்ந்த மிகப் பெரிய கஷ்டம். அவர்களின் முதல் சந்ததி, குமாரரில்

ஒரு குமாரன் காயின் மற்றோரு குமாரனாகிய ஆபேலைக் கொன்று போடுவதும், கொல்லுவதற்கு முன்தாகவே காயீனுடைய இருதயம் தேவனுக்கேற்றதாகவும் பரிசுத்தம் இல்லாததாகவும் தெரிகிறது. மற்றும் பாவம் உள்ளதாய் காணப்படுகிறது. காயீனும் ஆபேலும் இருவரும் தேவனுக்குக் காணிக்கையைக் கொண்டுவந்தார்கள். ஆபேலுடைய காணிக்கையை அங்கீகரித்தார். ஆனால் காயீனுள் பாவம் இருந்ததால் தேவன் அவனுடைய காணிக்கையை அங்கிகரிக்கவில்லை. அதற்கு அவன் மிகவும் எரிச்சல் கொண்டான்.

## காயீன் மற்றும் ஆபேல்

ஆபேல் காயீனை காட்டிலும் மேன்மையான பலி தேவனுக்கு செலுத்தினான் என்று எபிரெயர் = 11 : 4 வசனத்தில் படிக்கலாம். கீழ்ப்படிதல் மற்றும் அன்புக்கு விசுவாசம் ஆதாரமுமாயிருக்கிறது. எனவே, ஆபேலுனுடைய செயல் மற்றும் நடத்தை தேவனுக்கு விருப்பமானது. ஆனால், காயீனுடைய செயலும் அவனுடைய நடத்தையும் தேவன் விரும்பவில்லை. அதனால் காயீனின்பலி செலுத்தும்போது காயீனிடம் நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும். அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும் நீ அவனை ஆண்டுகொள்வாய் என்றார். ஆதியாகமம் = 4 : 7.

ஆகையால், காயீன் செலுத்தின காணிக்கையையோ அல்லது அவருடைய நடத்தையோ இந்த இரண்டும் அங்கிகரிக்கப்படவில்லை என்று காணப்படுகிறது. அவனுக்கு உண்டான மேன்மையானதை செலுத்தாமல் இருந்திருக்கலாம் இல்லை அனுமதிக்கப்படாததை செலுத்தியிருக்கலாம். அல்லது நன்மையான (கச்சிதமான) (அ) (உறுதியான) பலியை செலுத்திருக்கலாம். ஆனால் அவனுக்கு தேவன்மேல் அன்பற்ற நடத்தைக் கொண்டு இதைச் செய்திருக்கலாம். ஆனால் எப்பேற்ப்பட்ட காரியமாயிருந்தாலும் அதிலே தேவன் பிரியப்படமாட்டார். தேவன் அதை எதற்கு அங்கீகரிக்கவில்லை என்பதை காயீனுக்கு தெரிந்திருக்கும். அதன் பலன் என்னவென்றால் பூமி அவனுக்கு பலன் தரவில்லை மற்றும் அவன் பூமியிலே நிலையற்று அலைகிறவனாயிருப்பான் இதுவே அவனுக்கு இட்ட தண்டனை.

## நோவா

நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமான். வரப்போகிற ஜலப்பிரலாயித்திலிருந்து நீதிமான்களான ஜனங்களை எப்படி இரட்சிக்க வேண்டுமோ என்பதை தேவன் நோவாவிடம் சொன்னார். பேழையை உண்டுபண்ணு என்று சொன்ன அடையாளமோ, அலவுகளும் மிக சாதாரணமானவை. ஆனால், தெளிவானவை ஒரே ரக மரத்தால் செய்யப்பட்டு மிக நீளம், அகலம் மற்றும் உயரம் கொண்டு ஒரே ஜன்னல் மற்றும் ஒரே கதவுக் கொண்ட ஒரு பேழையை அவரும் அவருடைய குடும்பத்தையும் எப்படி காப்பாற்றிக் கொள்ளமுடியும் என்று நோவா தேவனிடம் கேட்டிருப்பார். ஆனாலும், உடனே அந்த அளவுகளும் அடையாளங்கள்படி பேழையை கட்டுவதற்கு அவன் தொடங்கிவிட்டான். தன் காலங்களில் வாழ்ந்த மக்களுடைய சீர்கேடான மனநிலை மற்றும் பாவத்தோடு கலந்த வாழ்க்கையின் நிலை குறித்து நோவா அவர்களை எச்சரித்திருப்பான் என்று எபிரெயர் = 11 : 7 ஆம் வசனத்தை படிக்கலாம். விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்புப்பெற்று, பய பக்தியுள்ளவர்களாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டு பண்ணினான். அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்திரவாளியானான்.

வேதாகமத்தில் உள்ள முதல் புத்தகத்தில் உள்ள முதல் ஐந்து அதிகாரங்களில் மூன்று சம்பவங்களில் அவர்கள் சுய ஆலோசனையின்படி தேவனின் கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமையின் ஜனங்கள் மூன்று சம்பவங்களில் பார்க்கலாம். ஒருவன் தம்மை புத்திமான் என்று எண்ணி ஏதோ தேவை என்று அதை அது அவர்களின் பார்வைக்கு இன்பமாய் காணப்பட்டதை இச்சித்து தேவனுக்கு கீழ்ப்படியாமல் போனார்கள்.

3. நோவாவின் விசுவாசம் தேவன்மேல் சார்ந்திருந்தது.

1..................... தேவன் எதை விரும்பினாரோ அதற்கான ஆலோசனை
2. ............. தேவன் எதை விரும்பிகிறாரோ மற்றவர்களுடைய அபிப்ராயங்கள்
3. ............. தேவன் எது தேவை என்று சொன்னாரோ அந்த தேவனுடைய ஞானம்

4. தமது சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதர்கள் பாவம் செய்தபின் தேவன் மனஸ்தாபப்பட்டார்.

.....................ஆம்
................. இல்லை

5. தேவனுக்கு கீழ்ப்படியாமையால் பொல்லாதவர்களுக்கு பலன் ஒன்றுமில்லையா.

.....................ஆம்
................. இல்லை

மற்றொருவன் தேவனை ஆராதிப்பதில் தேவனுக்கு விருப்பமானதை செலுத்தாமல் அதனால் கீழ்ப்படியாமல் போனார்கள். மற்றொரு சமுதாயம் அவர்கள் இருதயத்தின் தோற்றமெல்லாம் கெடுத்துக் கொண்டு தேவனுக்கு கீழ்ப்படியாமல் போனார்கள். ஒவ்வொரு நேரங்களில் தேவன் அவர்களுடைய கெட்ட காரியங்களில் விருப்பப்படாமல் தன்னுடைய உறுதியான வார்த்தையினால் அவர்களுடைய செயல்களுக்கு தீர்ப்ப சொன்னார். சிருஷ்டி கர்த்தர் உண்மையுள்ள தேவன் அவர்களின் கிரியைகளின் தக்க இந்த காரியங்களை உண்டாக்கினார்.

**கேள்விகள் :**

1. காயீனுடைய பலியை தேவன் அங்கிகரிக்கவில்லை.

1. ...................... ஜெந்துக்கள் பலிகளைவிட நிலத்தின் கனிகளை செலுத்தினான்.
2................ காயீன் கீழ்ப்படியவில்லை மற்றும் செலுத்தவதில் பாவம் செய்தான்.
3................நல்லவைகள் தனக்கு வைத்துக்கொண்டான்.
4............. பகிரங்கமான செலுத்தப்படவில்லை.

2. நோவா தேவனின் தீர்மானத்திலே தன்னுடை சொந்த ஆலோசனை சேர்த்துக் கொள்ளாமல் அனுசரித்தார்.

.....................ஆம்
................. இல்லை

## ஆதியாகமம் 7 - 10

## பாடம் - 3

நோவா தேவனுக்குக் கீழ்ப்படிந்த ஒரு நீதிமான். ஜலப்பிரலாயத்திலிருந்து மனித ஜாதிகளை இரட்சிப்பதற்கு விசுவாசத்தினாலே ஒரு பேழையை உண்டாக்கினார். பேழையை உண்டுப் பண்ணின பிறகு நோவா. அவருடைய குடும்பம் பேழைக்குள் பிரவேசித்தனர். பிறகு ஜீவனுள்ள ஜீவராசிகள் எல்லாம் பேழைக்குள் பிரவேசித்தன. அதன்பிறகு வானத்தின் மதருகளை திறந்து பூமியின் மேல் ஜலம் நிரப்பிற்று. ஜலப்பிரலாயம் வந்தது. தேவன் பேழையின் கதவு மூடி, பேழைக்குள் இருந்த நோவா குடும்பம் தவிர சகல சிருஷ்டியும் ஜலப்பிரலாயத்தினால் தேவன் அழித்துப்போட்டார். மாதங்களும் நாட்களும் கழிந்த பிறகு ஜலம் குறைந்தது. அப்போது நோவா, அவருடைய குடும்பம் மற்ற சகல ஜீவராசிகளும் பேழையிலிருந்து வெளியே வந்தன.

அப்பொழுது நோவா பலிபீடத்தை உண்டுபண்ணி பலி செலுத்தி தேவனை ஆராதித்தார். இந்த பலியை தேவன் சந்தோஷித்தார்.

சுகந்த வாசனையைக் கர்த்தர் முகர்ந்தார். அப்பொழுது கர்த்தர். இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை, மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கி பொல்லாததாயிருக்கிறது. நான் இப்பொழுது செய்ததுபோல, இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை. பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அலுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னார்.

ஆதியாகமம் : 8 : 21, 22

தேவன் அந்த நோவாவிடம் சில குறிப்புகளும், கட்டளைகளையும் கொடுத்தார். ஆதியாகமம் = 9 : 3-7.

1. நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும் உங்களுக்கு ஆகாரமாய் இருப்பதாக.

2. பசும் பூண்டுகளை உங்களுக்குத் தந்தது போ, அவைகள் எல்லாவற்றையும் உங்களுக்குத் தந்தேன்.

3. மாம்சத்தை அதில் இரத்தத்தோடே புசிக்கவேண்டாம், இரத்தமே அதில் உயிர்.

4. பிறகு உங்களுக்கு உயிராயிருக்கிற உங்கள் இரத்தத்திற்காக விசாரிப்பேன். அதைக்குறித்து சகல ஜந்துக்களையும் மனுஷர்களையும் விசாரிப்பேன். ஒவ்வொரு மனுஷனுடைய உயிரைக் குறித்தது. அவனுடைய சகோதரனையும் விசாரிப்பேன்.

5. மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது. ஏனென்றால் மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டான்.

6. நீங்கள் பலுகிப் பெருகி, பூமியிலே திரளாய் வர்த்தித்து விர்த்தியாகுங்கள் என்றார்.

அப்பொழுது தேவன் நோவா மற்றும் சகல ஜீவங்களோடு ஒரு உடன்படிக்கைச் செய்தார்.

நோவா பிறகு தன் சந்ததியிலிருந்து காம் தனது சகோதரர்களுக்கு அடிமையாகும்படிக்கு தகப்பனிடத்தில் கீழ்த்தரமாக நடந்துக்கொண்டால் சபிக்கப்பட்டான். இப்படி பாவம் மறுபடியும் கதவாண்டையில் பிறந்தது. ரோமர் 1:28-32 வசனம் வரை இவ்விதமாய் சொல்லப்பட்டது.

தேவனை அறியும் அறிவைப் பற்றிக் கொண்டிருக்க அவர்களுக்கு மனதில் வாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக் கொடுத்தார். அவர்கள் சகலவித அறியாயத்தினாலும், வேசித்தத்தினாலும், துரோகத்திலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு, பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறு பண்ணுகிறவர்களுமாய், தேவ பகைஞருமாய், துரோகிருதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய், பெற்றாருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய் சுபாவ அன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள்.

நோவாவின் நாட்களுக்கும் இன்றைய நம்முடைய காலகட்டங்களுக்கும் சில பொருத்தங்களைக் காணலாம்.

1. அன்றைய மனிதர்களும் பாவத்திலிருந்தார்கள், இப்பொழுது இன்றைய மனிதர்களும் பாவிகளே. ரோமர் = 3 : 23. எல்லாரும் பாவம்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி,

2. அவர்கள் பாவத்தினாலே மரித்துக்கொண்டிருந்தார்கள். நாமும் அப்படியே – யோவான் = 8 : 24 (அ)

3. நோவா தேவனை ஆராதித்தபின் இனி ஒருபோது ஜலப்பிரலாயத்தினால் மாம்சமானவைகளெல்லாம் சங்கரிக்கப்படுவதில்லையென்று வாக்களித்தார்.

.....................ஆம்
................. இல்லை

4. பேழையை உண்டுபண்ணுவதற்கு தேவன் காட்டிய அளவுகளை மட்டுமே நோவா அனுசரித்தார்.

.....................ஆம்
................. இல்லை

5. இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தவர்கள் அவர்களுடைய பாவத்திலேயே இருந்து அழிந்து போவார்கள்.

.....................ஆம்
................. இல்லை

ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்.

3. நீதிமான்கள் காப்பாற்றபடுவதற்கு எந்த காரியம் செய்யவேண்டுமோ அதை நோவா சொன்னார். அதேப்போல் இப்பொழுதும் நமக்கு சொல்லப்படுகிறது. யோவான் = 8 : 24 – 6. நானே அவர் நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்.

4. நோவா காலத்தில் இருந்த எல்லாரும் ஜலப்பிரலாயத்தில் இருந்து இரட்சித்துக்கொள்ள ஒரு வாய்ப்பு இருந்தது. அதேபோல் இன்றை நமக்கும் இரட்சித்துக் கொள்ள வாய்ப்பு உள்ளது. 2.கொரிந்தியர் = 6 : 2(பி) இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம் இப்பொழுதே இரட்சணியநாள்.

## கேள்விகள் :

1. தேவனுடைய வார்த்தை கேட்டு பேழையை உண்டுப் பண்ணுவதும் மற்றும் மனுஷர் ஜாதியை காப்பாற்றப்பட்டதனால் நோவா நீதிமானாக்கப்பட்டார்.

.....................ஆம்
................. இல்லை

2. ஒருவனுக்கு இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு அனுகூலமான நேரம்.

1. ..................... ஒருவனுடை கொடூர செயல்கள் புதைத்த பின்னர்.
2. ................. குடும்ப வேலையைவிட இந்த சமயம் பெரிதல்ல.
3. ............. மற்றொரு சமயம் அல்ல இப்பொழுதே அனுகூலமான சமயம்.

## உடன்படிக்கை
## ஆதியாகமம் 12 - 17 அதிகாரம்வரை

## பாடம் - 4

தேவனுக்கு கீழ்ப்படிதலைப்பார்க்கிலும் அவர்கள் சொந்த இச்சைகளுக்கு இழுக்கப்படுவதற்கு ஆதாம். ஏவாளுக்கு சோதனை எதிரானது அதன் பிறகு ஜலப்பிரலாயத்திலிருந்து இருநூற்றுத் தொண்ணூறு வருடங்களுக்கு பிறகு மற்றும் கற்பலகையின் மீது கட்டளை தேவன் மோசேக்கு கொடுத்த காலத்துக்கு சில நூற்றாண்டுகளுக்கு முன்பு தேராகு ஆபிரகாமை பெற்றான். ஆபிரகாம் பெரியவரானபிறகு தேவன் ஆபிரகாமிடம் இவ்விதமாய் செய்தார்.

கர்த்தர் ஆபிராமை நோக்கி, நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டு புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப்போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி உன்னை ஆசிர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சரிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார். (ஆதியாகமம் 12 : 1-3) தேவன் ஆபிரகாம் என்கிற பெயரை மாற்றி ஆபிரகாம் என்ற பெயரிற்று அவருடன் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபித்தார்.

(எபிரெயர் - 11 ஆம் அதிகாரத்தில் இவ்விதமாய் நாம் வாசிக்கலாம். ஆபிரகாம் அழைத்தபோது அவருடைய விசுவாசத்தின்படி அந்த அழைப்புக்குக் கீழ்ப்படிந்து, சுதந்தரமாய் பெறப்போகிற அந்த பிரதேசத்திற்கு புறப்பட்டார். பின்பு அவர் எங்கு செல்லவேண்டுமோ அறியாமலேயே சென்றார். விசுவாசத்தின்படி அவருடன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சமான சந்ததியர்களான, ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களான கூடாரங்களில் வாசம்பண்ணின அந்நிய தேசங்களில் இருந்ததைப் போல வாக்குத்தத்தம் தேசத்திலே பரதேசியைப் போலச் சஞ்சரித்தார்கள் ஏனென்றால் தேவன் எதற்கு சீறப்பாச்சாரி உண்டு பண்ணுகிறவர், அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான். (எபிரெயர் = 11:8-10) வசனம்வரை. ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கை ஒரு ஜாதியான மக்களுக்கு மாத்திரமல்ல சகல மனுஷர்களுடன் செய்யப்பட்டதென்று. நிச்சயமாய் காணலாம்.

தேவன் ஆபிரகாம் மற்றும் அவருடைய மனைவி சாராளுடன், அநேகரை சந்ததியாய் கொடுப்பேன் என்று வாக்குத்தத்தம் செய்யும்போது அவர்களுக்கு பிள்ளைகள் இல்லை. ஒரு குமாரனைக் குறித்து வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்குள் அவர்கள் பொறுமையை இழந்தார்கள். அப்படி என்றால் மனுஷீதியாய் ஆலோசனை பண்ணினால், அவர்கள் அந்த விஷயத்தை கையில் எடுத்துக் கொண்டு பிரச்சனையை தீர்க்கலாம் என்று யோசனை பண்ணினார்கள். பொறுமையை இழந்த அந்த சமயத்தில் இந்த காரியத்தினாலே அதன்பிறகு காலத்தில் இஸ்மாயில் என்கிற முதல் குமாரன், என்றால் சாராளுடைய அடிமைக்குப் பிறந்த அவருடைய சந்ததிக்கும் மற்றும் வாக்குத்தததின் குமாரன் ஈசாக்கு சந்ததிக்கும் கலகங்கள் உண்டானது. இன்றைக்கும் அது நடந்தேறி வருகிறது. பிள்ளைகளை பெறுவதற்கு ஆபிரகாம், சாராளும் சரீரங்களுக்கு பெலன் இல்லாததனால் அதுரை தேவன் காத்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு குமாரன் பிறக்க நேர்ந்தது என்றால் அது நேராய் தேவன் பண்ணப்பட்ட வாக்குத்தத்தம் மற்றும் அவர்களுடைய விசுவாசத்தினாலே நடந்த பலன் என்று சொல்லுவதில் எந்தவிதமான சந்தேகமில்லை. (எபிரெயர் : 11 : 11-12)

ஆபிரகாம் அநேக ஜனங்களுக்கு தகப்பன் மற்றும் விசுவாசிகளுக்கும் தகப்பன் என்று அழைக்கப்பட்டாலும் அவர் பாவமில்லாதவரல்ல ஒன்றல்ல அநேகமுறை பொய் பேசினார். ஆனாலும், அவன் தேவனால் காணப்பட்டபோது அவன் மனந்திரும்பி தன்னுடைய விசுவாசத்தையும், நம்பிக்கையைத் தேவன்மேல் வைத்தார். விசுவாசிக்கிற யாவறியும் விடுவிக்கும்படி ஆபிரகாம் சந்ததியிலிருந்து என்றால் ஈசாக்கு மற்றும் யாக்கோபுலிருந்து ஒரு இரட்சகர் வருவதற்கு வழி வகுக்கப்பட்டது. எல்லா ஜனங்களிலும் மற்றும் எல்லா ஜாதிகளிலும் நடக்கிறதுபோலவே தேவனிடத்தில் விசுவாசம் வைத்து கீழ்ப்படிகிறவர்களுக்கு ஆசீர்வாதமும் கொடுப்பதற்கு மற்றும் (மாறுபாடானவர்களுக்கு) கீழ்ப்படியாதவர்களுக்கு தண்டனை கொடுப்பதற்கு ஆச்சரியமல்ல. தேவன் ஆபிரகாமிடம் பண்ணின உடன்படிக்கை நமக்கு கிறிஸ்து மூலம் நிறைவேறுகிறது நாமும் கிறிஸ்துவுக்குள் விசுவாசம் வைத்து கீழ்ப்படிகிறவர்கள் இரட்சிப்படைவதன் மூலம் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்த வாரிசுகளாய் நாம் இருக்கிறோம்.

ஆபிரகாம் தொண்ணூற்றென்பது வயதானபோது (எகோவர்) – கர்த்தர் அவருக்கு தரிசனமானார்... நான் சர்வ வல்லமையுள்ள தேவன், என்னுடைய சந்நிதியில் நடந்துப் பிழையற்றவனாய் இரு. எனக்கும் உமக்கும் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தி உன்னை மேன்மேலும் மிகவும் திரளாய்ப் பெருகப் பண்ணுவேன் என்றார். (ஆதியாகமம் 17 : 1–2)

ஆண்பிள்ளைக்கு எல்லாரையும் விருத்த சேதமை பண்ணுவேண்டும் என்று தேவன் சொன்ன கட்டளைகளுக்கு ஆபிரகாம் கீழ்ப்படிந்தாலே இந்த உடன்படிக்கை நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. மோசேவுக்கு நியாயப்பிரமாணம் கொடுப்பதற்கு முன்பு அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பு என்றால் ஆபிரகாம் சாராலுக்கு பிள்ளைகள் பெறுவதற்கு முன்பு இது நடந்தது.

அநேக வருடங்களுக்குப் பிறகு, ஈசாக்கு பிறந்த பொழுது அந்த உடன்படிக்கைபடி, எட்டாம் நாளிலே ஆபிரகாம் அவனுக்கு விருந்தசேதணம் பண்ணினான். தேவனுக்கும் ஆபிரகாமுக்கும் நடுவிலே இருக்கின்ற இந்த உறவு எதைக் காட்டுகின்றது? முதலாவது தேவன் விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் விரும்புகின்றனர். ஆபிரகாமுடைய விசுவாசத்தின் வழியாக, மனிதன் தேவனிடம் சமாதானப்படுவதற்கான வழியை தேவன் தொடங்கினார். மனிதர்கள் எல்லாருடைய பாவங்களுக்காக நசரேனாகிய இயேசு பரிபூரண விசுவாசக் கீழ்ப்படிதல் மூலம் தன்னைத் தான் மகிமையுள்ள பலியாக அற்பித்துக் கொள்ள வரைக்கும் அதை வெளிப்படுத்தாமல் இருந்தார். தேவன் ஆபிரகாமிடம் செய்த வாக்குத்தத்தத்திற்காக தொடர்ச்சியாக விசுவாசம் வெளியரங்கம் ஆவதற்கு முன்பதாக இப்படி வரலாறு நடைபெற்று முழுமையடைந்தன. ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தம் செய்யப்பட்டது அந்த சந்ததி கிறிஸ்து. அந்த பிரகாரமாக நாம் கிறிஸ்துவினுள் இருந்தால் நாம்கூட ஆபிரகாம் சந்ததியாக அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

## ஆபிரகராமுடன் தேவன் செய்த வாக்குத்தத்தங்கள்

முதலாவது சந்ததியைப் பற்றிய வாக்குத்தத்தம், அது ஈசாக்கு மூலம் எப்படியெனில் ஆபிரகாமுடைய முதல் சந்ததி வழியாக தொடங்கப்பட்டது. ஈசாக்கு மூலம் நிபந்தனை அதாவது உடன்படிக்கை தொடங்கப்பட்டது, இஸ்ரவேல் மூலமாக அல்ல.

இரண்டாவது, கானான் பற்றியது; நீ எழுந்து நான் உனக்கு காண்பிக்கிற தேசத்திற்கு போ, என்று தேவன் ஆபிரகாமுடன் சொன்னதினாலே ஆபிரகாம் கானான் தேசத்திற்கு வந்தார். அப்பொழுது தேவன் ஆபிரகாமிடம் உன் சந்ததிக்கு இந்த தேசத்தைக் கொடுப்பேன், என்று வாக்குத்தத்தம் பண்ணினார். ஆபிரகாம் சந்ததியை இந்த தேசத்தைப் பெறுவதற்கு எகிப்திலிருந்து 400 வருடங்கள் அடிமைத்தனத்திலே இருந்து விடுதலைப்பெற்று நாற்பது வருடம் வனாந்திர பிரயாணத்திற்குப் பிறகு மீதமிருந்த இஸ்ரவேலர்களுக்கு கானான் அதாவது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை கொடுத்தார். அதே விதமாக நிறைவேற்றப்பட்டது. தேவன் நம்மேல் கிருபைக்காட்டி, தன்னுடைய குமாரனை அனுப்பி, அவர்மேல் சம்பூர்ண பலியாக நமக்காக சிலுவையில் அற்பித்தார். மறுபுத்திரர்கள் தேவனிடம் ஒப்புர வாக்குவதழ்க்காக இதைவிட வேறொரு வழி இல்லை. அது தேவனுடைய வசனத்தின் மூலம், சமாதான செய்தியை அந்த செய்தியின்மேல் விசுவாசம் வைத்து, அதற்கு கீழ்ப்படிதலின் வழியாக நமக்கு கூட தேவனிடம் சமாதானம் பெற முடியும்.

கேள்விகள் :

1. அவருடைய சந்ததி மனிதர்கள் எல்லாரையும் ஆசீர்வாதிக்கும் என்று தேவன் செய்த வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டன.

................ பத்துக் கட்டளைகள் கொடுக்கப்பட்டபின்
................ ஈசாக்கை ஆபிரகாம் பலிகொடுத்தபோது
................ விருத்தசேதனத்திற்குமுன் மற்றும் கானான் செல்வதற்கு முன்

2. இஸ்ரவேலர்களுக்கு வாக்குத்தத்தம் கொடுக்க அநேக வருடங்களுக்குமுன், அது எப்படியெனில் ஆபிரகாமிடம் தேவன் வாக்குத்தத்தம் செய்தபோது, அது தேவன் மேல் ஆபிரகாம் நம்பிக்கை வைப்பதற்கு பிரியமான ஆதாரமாயிருக்கின்றன.

................ ஆம்
................ இல்லை

3. ஆபிரகாமுக்கும் ஈசாக்கும் தேவன்மேல் இருந்த விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் இல்லாமையால் தேவன் ஈசாக்கு இவ்வுலக வாழ்க்கைக்குக் கஷ்டமாயின.

................ ஆம்
................ இல்லை

4. தேவன் ஆபிரகாமிடம் செய்த நிபந்தனைகளிலே இரண்டு வாக்குத்தத்தங்கள்.

................ சந்ததி மற்றும் வருமானம்
................ மற்றும் தேசம்
................ ஐஸ்வர்யம் மற்றும் ஞானம்

5. தேவன் தன்னுடைய வாக்குத்தத்தம் நிறைவேற்றினார்.
................ ஆம்
................ இல்லை

## பாரமான பாவம்
## அதிகாரங்கள் - 18-19

## பாடம் - 5

லோத்து மற்றும் ஆபிரகாமுடைய ஊழியக்காரர்கள் மத்தியில் வாக்குவாதம் உண்டாயிற்று. அந்த காரணத்தால் தனக்கு பிடித்த பூமியை எடுத்துக் கொள்ளும்படி ஆபிரகாம். தன்னுடைய சகோதர குமாரனாகிய லோத்துவுக்கு சொன்னார். லோத்து சோதோம பட்டணம் அருகில் இருக்கின்ற இடங்களை

தேர்ந்தெடுத்தினால் மீதியிருக்கின்ற இடங்களை ஆபிரகாம் எடுத்துக்கொண்டார். சோதோம பட்டணங்களில் இருக்கின்ற ஜனங்களைக் குறித்து தேவன் இப்படிச் சொன்னார். பின்பு கர்த்தர் சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொத்தாயிருப்பதினாலும், நான் இறங்கிப் போய் என்னிடத்தில் வந்து எட்டின அதின் கூக்குரலின்படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லையோ என்று பார்த்து அறிவேன் என்றார். (அதியாகமம் 18:20,21) அந்தப் பட்டணம் முழுவதும் கேட்டுப் போய் இருந்தன. அதனால் தேவன் சோதோமா கொமோரா இடத்தை அழித்துவிட்டார். அப்படி அழிப்பதற்கு தூதர்கள் அனுப்புவதற்கு முன்னே, நீதிமான்கள் யாராகிலும் இருக்கின்றார்களா? அப்படி இருந்திருந்தால் சோதோமாவை காப்பாற்றுவதற்கு தேவனிடம் பேராடும்போது ஆபிரகாமிடம் தேவன் தன்னுடைய திட்டத்தை முன்னதாகவே தெரியப்படுத்தினார். ஆகிலும் அங்கே மிகக் குறைந்த கணக்கிலான ஜனங்கள் மட்டும் இருக்கின்றனர். ஆதலால் அந்த தூதன் மனிதன் ரூபத்தில் சாயங்கால வேளையிலே பட்டணத்தின் நுழைவாசல் வழியாய் சோதோமா பட்டணத்துக்குள் நுழைந்தார்கள் லோத்து அந்த மனிதர்களை பார்த்தபோது அவர்களை எதிர்த்து பாவந்தப்படுத்தினரினாலே அவர்கள் அவனை காவல் காத்து அவனுடைய வீட்டிற்குள் பிரவேசித்தார்கள். லோத்து அந்த தூதர்களுக்கு தன்னுடைய தேசமில்லாத அந்நிய தேசத்திலே உபசரிப்புக் கொடுத்து, ஊழியம் செய்தான். அந்த பட்டணத்தோடு இருக்கிறவர்களிடம் பாவம் செய்யாதிருந்தான். அதனால் அந்த தூதர்கள் அவனையும் அவனுடைய வீட்டாரையும் அந்த தண்டிப்பிலிருந்து விடுதலை செய்தார்கள்.

சோதோமாவினுடைய பாவம் கீழே கொடுக்கப்பட்ட வசனங்களை படிக்கலாம். அவர்கள் படுக்கும் முன்னே சோதோம் பட்டணத்து மனிதராகிய வாலிபர்முதல் கிழவர்மட்டுமுள்ள ஜனங்கள் அனைவரும் நானாதிசைகளிலுமிரந்து வந்து, வீட்டைச் சூழ்ந்து கொண்டு, லோகத்தைக் கூப்பிட்டு, இந்த இராத்திரி உன்னிடத்தில் வந்த மனுஷர் எங்கே? நாங்கள் அவர்களை அறியும்படிக்க அவர்களை எங்களிடத்தில் வெளியே கொண்டுவா என்றார்கள். அப்பொழுது லோத்து வாசலுக்கு வெளியே வந்து தனக்குப் பின்னாலே கதவைப்பூட்டி, அவர்களிடத்தில் போய், சகோதரரே, இந்த அக்கிரமம் செய்ய வேண்டாம். இதோ, புருஷரை அறியாத இரண்டு குமாரத்திகள் எனக்கு உண்டு. அவர்களை உங்களிடத்திற்கு வெளியே கொண்டு வருகிறேன். அவர்களுக்கு உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள். இந்தப் புருஷர் என் கூரையின் நிழலிலே வந்த படியால், இவர்களுக்கு மாத்திரம் ஒன்றும் செய்ய வேண்டாம் என்றான். அதற்கு அவர்கள அப்பாலேபோ பரதேசியாய் வந்த இவனா நியாயம் பேசுகிறது?

இப்பொழுது அவர்களுக்குச் செய்வதைப் பார்க்கிலும் உனக்கு அதிக பொல்லாப்புச் செய்வோம் என்று சொல்லி, லோத்து என்பவனை மிகவும் நெருக்கிக் கதவை உடைக்கக் கிட்டினார்கள். அப்பொழுது அந்த புருஷர்கள் தங்கள் கைகளை வெளியே நீட்டி, லோத்தைத் தங்கள் அண்டைக்கு வீட்டக்குள் இழுத்துக்கொண்டு, கதவைப் பூட்டி (ஆதியாகமம் 19:14-10)

அந்த தேவ தூதர்கள், அவர்கள் வந்தக் கவனத்தை விவரித்தார்கள். அதனால் கிழக்கு வெளுக்கும்போது அந்தத் தூதர் லோத்தை நோக்கி, பட்டணத்திற்கு வரும் தண்டனையில் நீ அழியாதபடிக்கு எழுந்து, உன் மனைவியையும், இங்கே இருக்கிற உன் இரண்டு குமாரத்திகளையும் அழைத்துக் கொண்டு போ என்று சொல்லி, அவனை துரிதப்படுத்தினார்கள்... போத்து சோவாருக்குள் வரும்போது பூமியின்மேல் சூரியன் உதித்தது. அப்பொழுது கர்த்தர் சோதோமின் மேலும் கொமோராவின் மேலும் கர்த்தராலே வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப் பண்ணி, அந்தப் பட்டணங்களையும், அந்தச்

சமபூமியனைத்தையும் அந்தப் பட்டணங்களின் எல்லாக் குடிகளையும், பூமியின் பயிரையும் அழித்துப் போட்டார். (ஆதியாகமம் 19:15, 23-25)

தொடர்ச்சியிலே தேவன் ஆதாம் ஏவாளுடைய கீழ்படியாமையினாலே ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியே துரத்திவிட்டார். மற்றும் நோவா, அவருடைய குடும்பத்தையும் ஒன்றுக் கூட்டி மிருகங்கள் அல்லாமல், மீதமிருந்த ஜனங்கள் எல்லாரையும், அவர்களுடைய கெட்ட எண்ணம், கெட்ட இருதயத்தையும் தேவன் அவர்களைப் பார்த்து அழிந்துப் போட்டார். இப்பொழுது சோதோமாவையும் அவர்களுடைய பயங்கரமான பாவத்தினாலே அவர்களை ஆக்கிணைக்குட்படுத்திக் கொன்றுப் போட்டார். கீழ்ப்படியாமை மற்றும் கேட்ட இருதயம் தேவன்மூலம் கொன்றுப் போடப்படும் மற்றும் அப்படிப்பட்டவைகளை செய்கின்றவர்கள்கூட, அவர்களுடைய கீழ்ப்படியாமை, கெட்டதன்மையிலிருந்து திரும்பாவிட்டால் தேவன் அவர்களையும் அழித்துவிடுவார் என்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதனால் பாவத்தினால் இருந்தால் அழிவார்கள் என்று இயேசு சொன்னார். மற்றும் பாரமான பாவத்திலிருந்து நாமும்கூட விடுதலையாக வேண்டும்.

கேள்விகள் :

1. எப்படிப்பட்ட பாவம் சோதோமாவை அழிக்க தேவனுக்கு மிகப்பெரிய காரணமாக தெரிந்தது.

............................ பாரமான பாவம்
............................பிசாசை தொழுதுக் கொள்வது
............................காமவிகாரம்

2. யோர்த்தானுக்கு கிழக்கே இருக்கின்ற இடத்தை லோத்து எதற்காக தேர்ந்தெடுத்தான்?

............................லோதோமா கொமோராவினுடைய வாழ்க்கை
............................காலம் கடந்து போகையில் அவன் ஆபிரகாமுக்கு தூரமாக இருக்கவேண்டும் என்று நினைத்தான்.
............................அந்த பூமி, இடங்கள் எல்லாம் நன்றாக தெரிந்தது.
............................வேதாகமத்தில் சொல்லப்படவில்லை.

3. தேவனுக்கு கீழ்ப்படியாமையாலே கிடைக்கின்ற பாவம்

............................ஏதேன் தோட்டத்தில்
............................நோவா காலத்தில் இருந்த ஜனங்கள்
............................சோதோமா மற்றும் கொமோ ஏ பட்டணங்களில்
............................மேலே கொடுக்கப்பட்டவைகளெல்லாம்

4. லோத்துவை சந்தித்த தேவ தூதர்கள (ஜனங்கள்) மூலம் அழிக்கவேண்டும் என்பதற்காக முயற்சி எடுத்தாலும் சோதோமா கொகோமாரா இடத்தில் இருக்கின்ற மனுஷர்கள் மட்டும் அழிக்கப்பட்டார்கள்.

....................ஆம்

............................இல்லை

5. சோதோமா கொமோரா பட்டணங்களில் வாழ்ந்திருந்த நீதிமான்களை இரட்சிப்பதற்கு ஆபிரகாம் தேவனிடம் போராடினான்.

..........................ஆம்
............................இல்லை

## அடிமைத்தனம்
## யாத்திராகமம் - 1-12

### பாடம் - 6

ஆபிரகாம், கல்தேயர் பட்டணமாக ஊரில் வாழ்ந்துக் கொண்டிருக்கும்போது, தான் காண்பிக்க போகின்ற தூர தேசத்திற்கு செல்வதற்கு தேவன் அவரை அழைத்தார். அப்பொழுது வாழ்வதற்கு ஒரு வீடுகூட இல்லை. ஆனாலும் அவனுடைய சந்ததி ஒருநாள் வாக்குத்தத்த தேசத்தை வாரிசு வாழும் இடமாக பெறப்போகின்றார்கள். வரலாற்றில் சிலகாலம் சென்றபிறகு ஆபிரகாம் சந்ததியை எகிப்து தேசத்தில் அடிமைப்பட்டார்கள். தேவன் மோசேயின்மூலம் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி, வாக்குத்தத்த பூமியாக கானான் தேசத்தைக் கொடுத்தார். அது ஆபிரகாம் எதை எதிர்ப்பார்த்தாரோ அந்த தேசத்திற்கு வழி நடத்தினார். பாவம் என்கின்ற அடிமைத்தனத்திலே பூமியில் வாழ்கின்ற நமக்கு இது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கின்றது தேவன் கிறிஸ்துவின் மூலம் நன்மை பாவம் என்கின்ற அடிமைத் தனத்திலிருந்து விடுதலை பண்ணி பரலோக வீட்டிற்கு நம்மை வழிநடத்துகின்றார்.

யாக்கோபின் குமாரர்களில் அவர்களுடைய கடைசி தம்பியாகிய யோசேப்பின் மேல் இருந்த கோபத்தினால் அவர்கள் செய்த காரியம், அதாவது ஆபிரகாமுடைய மற்றொரு குமாரனாகிய இஸ்மாவேல் சந்ததிக்கு அவரை விற்றுவிட்டார்கள். இது நடந்தபிறகு அந்த தூர தேசமாகிய எகிப்தியருக்க இவர்கள் பிரயாணத்தைத் தொடங்கினார்கள். ஒரு சாதாரணமான அடிமையாக அவரை விற்றுப் போட்டார்கள். ஒரு பயங்கரமான மிருகம் வந்து யோசேப்பைக் கொன்றுப்போட்டது என்று அவர்கள் தன் தகப்பனிடத்தில் அதாவது யாக்கோபுனிடத்தில் பொய்சொல்லி நம்ப வைத்தார்கள், நியாபகம் வைத்துக் கொள்ளுங்கள், தன்னுடைய தகப்பனிடத்தில் ஆசீர்வாதம் பெறுவதற்கு யாக்கோபு கூட தன் தகப்பனை ஏமாற்றினார். எகிப்திலே யோசேப்பு விசுவாசமுள்ளவனாய் இருந்தான் அதில் உறுதியாய் இருந்தான். மற்றும் ஆபிரகாம் சந்ததிலியிலிருந்து ஒரு பெரிய ஜனமாக உண்டாக்குவதற்கு தேவன் யோசேப்பை பயன்படுத்திக் கொண்டார். இப்படி யோசேப்பின்மூலம் எகிப்திலே நுழைந்த இஸ்ரவேலர்கள் உண்மையான தேவனை கூட தொழுதுக் கொள்ளமல் விக்கிரகத் தொழுகைச் செய்தவர்கள் மத்தியில் அநேக வருடங்கள் அடிமையாக இருந்தார்கள்.

இப்படி எகிப்திலே 400 வருடங்கள் அடிமைத்தனத்திலே மோசே பிறப்பதும், ஆண் பிள்ளையை கொள்ள வேண்டும் என்று பார்வோன் கட்டளைக்கு பயந்து மோசேயினடைய பெற்றோர்கள் தன் பிள்ளையை மறைத்து வைத்துக் காப்பாற்றினார்கள். பார்வோன் கட்டளைக்கு கீழ்ப்படிவது

அவர்களுக்கு பிரியமாயிருந்தது. அவர்கள் பார்வோனை கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை. மோசே பிறந்தபோதுஅவனுடைய தாய்த் தகப்பன்மார் அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, விசுவாசத்தினாலே, ராஜாவினுடைய கட்டளைக்கு பயப்படாமல் அவனை மூன்றுமாதம் ஒளித்து வைத்தார்கள். (எபி. 11:23)

பார்வோன் மகள் மோசேயை பார்த்து அவன் மேல் பாசம் வைத்து, அந்த பிள்ளையைப் பார்த்தபோது பார்வோனுடைய குமாரத்தி அவளை நோக்கி, நீ இந்தப் பிள்ளையை எடுத்துக் கொண்டுபோய் அதை எனக்கு வளர்த்திடு, நான் உனக்கு சம்பளம் கொடுக்கிறேன் என்றும், அந்த ஸ்திரீ பிள்ளையை எடுத்துக் கொண்டுபோய், அதை வளர்த்தாள். பிள்ளை பெரிதானபோது, அவள் அதைப் பார்வோனுடைய குமாரத்தியினிடத்தில் கொண்டுபோய் விட்டாள். அவளுக்கு அவன் குமாரனான் அவள்; அவனை ஜலத்தினின்று எடுத்தேன் என்று சொல்லி அவனுக்கு மோசே என்று பேரிட்டாள். (யாத் 2:9-10)

அப்படி அந்த பிள்ளை ராஜாவுடைய குமாரத்தியினுடைய குமாரனாய் ராஜ அரண்மனையிலே வளர்ந்து பெரியவனானான். எபிரெயர் 11 : 24-27-ல் இப்படி படிக்கின்றோம். விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் எனப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்துகொண்டு இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான். விசுவாசத்தினலே அவன் அதரிசன மானவரைத் தரிசிக்கிறது போல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தை விட்டுப் போனான். தேவன் எகிப்துவிலே 40 வருடகாலம் எல்லா வித்தைகளிலும் தேரினவனானபிறகு, மறு 40 வருடம் அவருக்கு ஊழியத்தை செய்வதற்கு வளர்த்து, ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபுக்கு வாக்குதத்தம் பண்ணப்பட பூமியை செல்வதற்கு இஸ்ரவேலர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பண்ணி மோசேயின் மூலம் வழி நடத்தினார்.

இந்த அடிமைத்தனத்தினாலே அவர்களுடைய விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் இல்லாமையினாலே அவர்களுடைய வாக்குத்தத்த பூமியை செல்வதற்கு 40 வருடகாலம் ஆயிற்று. தேவனுடைய கிருபையினாலே அவர்களுக்கு வாக்குத்தத்த பூமி கொடுத்த பொழுதே, அதை சுதந்தரித்துக் கொள்வதற்கு அவர்கள் பகைவர்களிடம் போராடுவது அவசியமாய் இருந்தது.

இன்று மனிதர்கள் பாவத்தில் அடிமைப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவினுடைய இரத்தம் மூலம் நாம் பாவத்திலிருந்து விடுதலை பெறுகின்றோம். நம்முடைய விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலில் உறுதியாக முன் சென்றால் நமக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தை அதாவது பரலோகம் சேர்வதற்கு வழியாய் இருக்கின்றது. அதற்கு நாம் கூட நித்தியம் இவ்வுலக வாழ்க்கையிலே பகைஞர்களிடம் போராட வேண்டியதாயிருக்கின்றது.

**கேள்விகள் :**

1. மோசே ஒரு அடிமையாக பிறந்தார் என்று எகிப்து ராஜா பார்வோனுடைய பேரனாக வளர்ந்தான்.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ஆம்

............................இல்லை

2. மோசே பார்வோனுடைய பேரனாக இருப்பதற்காக எதற்கு பிரியப்படவில்லை.

............................மோசேவைவிட மற்ற பிள்ளைகளை பார்வோன் நன்றாக பார்த்துக்கொண்டான்
............................மோசே பிறந்த குடும்பத்தை பார்வோன் நன்றாக பார்த்துக்கொள்ளவில்லை
............................தேவனிடத்தில் விசுவாசத்தின் மூலம்

3. தேவன் எகிப்திலே அடிமைப்பட்டவர்களுக்கு கானான் கொடுத்தாலும், அந்த வாக்குத்தத்த பூமிக்காக அவர்களுடைய பகைவர்களிடம் போராட வேண்டியதாயிற்று.

............................ஆம்
............................இல்லை

4. இன்று பாவத்தில் இருக்கின்ற மனிதர்கள் கூட, வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஆவிக்கூரிய தேசத்தை அதாவது பரலோகத்திற்காக அவர்கள் என்ன செய்யவேண்டும்?

............................தேவனுக்குள் இரட்சிப்படைய வேண்டும்.
............................நல்ல வேலைகள் செய்யவேண்டும்
............................ஏ மற்றும் பி

5. எகிப்து அடிமைத் தனத்திலிருந்து இஸ்ரவேலர்களை வெளியே கொண்டு செல்வதற்கு தேவன் மோசேவை நியமித்தார். அதற்குமுன் அவனுக்கு எகிப்தில் 40 வருடம் கற்றுக் கொடுத்து மற்றும் இன்னும்40 வருடம் இருந்த பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

............................ஆம்
............................இல்லை

## விடுதலை

## யாத்திராகமம் - 13 - 14

## பாடம் - 7

ஏற்ற நேரத்திலே மோசேயினுடைய தாய் பார்வோன் குமரத்தியிடத்தில் மோசேயை கொண்டுச் சென்றாள். (அப்போஸ்தலர் 7 : 22-26). மோசே பெரியவனானபோது தான் ஒரு எகிப்தியாரிடத்தில் செய்தக் காரியம் மூலம் பயந்து பார்வோன் இடத்தில் இருந்து ஓடிப்போய் மீதியான் தேசத்துக்குச் சென்றான். 40 வருடம் அங்கே ஆட்டு மேய்ப்பனாய் தன்னைத் தாழ்த்திக் கொண்டான். அதன் பிறகு அபிரகாம், ஈசாக்கு மற்றும் யார்கோபு சந்ததி என்றால் இஸ்ரவேலர்களை எகிப்து அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பண்ணுவதற்கு தேவன் அவரை தயார்படுத்தினார். அந்த அடிமைத்தனம் இன்று நம்முடைய பாவம் என்கின்ற அடிமை தனத்திலிருந்து வந்தான் சாயலாக இருக்கின்றது. அவர்களை அழிப்பதற்கு முன்னே தேவனுடைய வார்த்தைக்கு அவர்கள், கீழ்ப்படிவதற்கு தேவன் பத்து வாய்ப்பை பார்வோன் மற்றும் எகிப்தியர்களுக்குக் கொடுத்தார். தேவனுடைய

சக்தியை புரிந்துக்கொண்டான். இருந்தும் ஒவ்வொரு வாய்ப்பும் அறிந்தும் அறியாமலும் இருந்ததினால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. அவனுடைய முதல் குமாரன் மரணம் அடைந்தபிறகு இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து போவதற்கு ஒத்துக்கொண்டான். ஆனால் உடனேமே மனதை மாற்றிக்கொண்டு

அன்று இஸ்ரவேலர்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு சிவந்த சமுத்திர தனிடையில் காரியம் நடந்தன. அதுபோல இன்று மனிதர்கள் எல்லாருக்கும் அவர்களுடைய பாவத்திலிருந்து விடுதலை பெற்றுக் கொள்வதற்கு சிலுவையில் கூட காரியம் நடக்கின்றன. இப்பொழுது கிறிஸ்துவுக்குள் இரட்சிப்பு பெற்றவர்கள் அவரிடத்தில் ஐக்கியப்பட்டிருக்கின்றோம்.

அவர்களுடைய விசுவாசம் பலவீனமாயிருப்பதினாலே அவர்கள் கானான் தேசத்தில் சேற முடியாமல் ஆயிற்று. அவர்கள் யேசுவா, காலேபினுடைய வழிநடத்துதல் புறக்கனித்தார்கள் மற்றும் தேவனிடம் நம்பிக்கை வைக்கவல்லை. அதன் பலனாக வாகிருத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திலே அனுமதிக்கப்படவில்லை. மற்றும் கூட கானானிற்கு வழி நடத்தின மோசேவும்கூட தேவனை புறக்கணித்தான். அவனுக்குப்பதிலாக யோசுவாவை தேவன் நியமித்தான். அவர்கள் தேவன்மேல் விசுவாசம் வைத்தினாலும் அவருக்கு கீழ்ப்படிந்து இருப்பதினாலும், தேவன் அவர்களை வாக்குத்தத்தம் பண்ணின தேசத்திலே நுழையப்பண்ணினார். நாமும்கூட தேவன்மேல் விசுவாசம் வைத்துதேவனிடம் சமாதானம் பெற்றால் அல்லது ஒப்புரவானால் வாக்குத்தத்தம் பண்ணின தேசத்தை அதாவது பரலோகத்தைப் பெற்றுக்கொள்வோம்.

**கேள்விகள் :**

1. அடிமைதனத்தில் துன்பத்திலிருந்து இஸ்ரவேலர்களை விடுதலை செய்வதில் மோசே தேவனுக்கு எதிர்பார்க்காமல் தானே சொந்த தீர்மானத்தின்படி விடுதலை செய்யவேண்டும் என்று நினைத்தார்.

....................ஆம்
............................இல்லை

2. மரணம் மற்றும் அழிவிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு தேவன் பார்வோனுக்கு வாய்ப்பு அளிக்கவில்லை.

............................ஆம்
............................இல்லை

3. தேவனிடத்தில் இஸ்ரவேலர்களுக்கு இருக்கின்ற விசுவாசத்தின்படி அவர்களை சிவந்த சமுத்திரத்திலிருந்து வழி நடத்தி அப்புறத்தில் அவர்களை ஒரு புதிய ஜனமாக செய்தார்.

............................ஆம்
............................இல்லை

4. வாக்குத்தத்த தேசத்தை சேர்ந்த பிறகு இஸ்ரவேலர்கள் யார் மேல் விசுவாசம் வைத்தார்கள்.
............................யோசுவா மற்றும் காலேபு

............................அவர்களுடைய சொந்த உழைப்பு

5. மோசேவை எதுவரைக்கும் அநுமதித்தார்

............................வாக்குத்தத்த தேசமாகிய இஸ்ரவேலர்களை வழிநடத்தும் வரை.
............................வாக்குத்தத்த தேசத்திலே நுழைந்தார் இருந்தும் யேசுவாவை நடத்தினார்.
............................காண்பித்தார் அல்லாமலும் தேசத்தில் பிரவேசிக்கவில்லை.

## கற்பளகைகள் மேல் கட்டளைகள்
## யாத்திராகமம் 19 - 20

## பாடம் - 8

அநேக வருடங்களுக்கு முன் தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணின அதை நிறைவேற்றுவதற்கு தேவன் அநேக அற்புதங்களின் வழியே இஸ்ரவேலர்களை ஆசீர்வதித்தார். ஒரு லட்ச அடிமைகளை வாக்குத்தத்த பூமியில் சேரும்படி வழிநடத்தினது இவைகளில் உன்னதமானது. தேவன் ஆபிரகாமிடம் பண்ணின வாக்குத்தத்தின்படி 400 வருடகால பிறகு அதாவது அவர்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு மூன்று மாதம் பிறகு அவர்கள் சீனாய் பர்வதத்தன்மையில் சேர்ந்தார்கள். அங்கே தேவன் அவர்களுக்கு தரிசனமானார். தன்னுடைய மக்களுக்கு மேசேவை தெரியப்படுத்தினார். அப்பொழுது கர்த்தர் மோசேயினிடத்தில் இப்படிச் சொன்னார். நீ மலையின்மேல் என்னிடத்திற்கு ஏறிவந்து, அங்கே இரு; நான் உனக்குக் கற்பலகைகளையும், நீ அவர்களுக்கு உபதேசிப்பதற்கு, நான் எழுதின நியாயப்பிரமாணத்தையும் கற்பனைகளையும் கொடுப்பேன் என்றான். (யாத்திராஜமம் 24 : 12) இவைகளையே (யாத்திராகமம் 2013-17) இல் எழுதப்பட்ட பத்துக் கட்டளைகளைப் படிக்கமுடியும்.

1. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.

2. மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த்தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்.

3. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக? கர்த்தர் தம்முடைய நாமத்ததை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.

4. ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக. ஆறுநாளும் நீ வேலை செய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாமாக ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள் அதிலே நீயாகிலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும் உன் வேலைக்காரனானாலும் உன் வேலைக்காரியானாலும் உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம்.

5. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக.

6. கொலை செய்யாதிருப்பாயாக.

7. விபசாரம் செய்யாதிருப்பாயாக

8. களவு செய்யாதிருப்பாயாக

9. பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

10. பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக, பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைகாரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும் பின்னும் பிறனுக்குள்ளே யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றார்.

இவைகளை மறுபடியும் படியுங்கள். நிபந்தனைகள் கட்டளைகள் செய்வது செய்யக்கூடாதது. நாம் பார்க்கமுடியும். மன்னிப்பு மற்றும் விசுவாசத்தைப் பற்றி ஏதாவது கட்டளை சொன்னது போன்ற நீ பார்த்தாயா? மனிதனுடைய இருதயம். மனது மற்றும் கிரியை பற்றி ஒன்று அல்ல இரண்டு கட்டளை மட்டுமே பார்க்க முடியுமா? இந்த கட்டளைகள் நம்மை கிறிஸ்துவினிடத்தில் நடத்துகின்றது. சேர்க்கப்பட்டது எபிரெய நிரூபத்திலே சொன்னதுபோல இது ஒரு புதிய ஏற்பாட்டின்படி அதாவது சீர்கேட்டிற்கு மன்னிப்பின் ஏற்பாட்டிற்கு புதுப்பிக்கப்பட்டுள்ளன. அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்ததினால் இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேட வேண்டுவதில்லையே. அவர்களைக் குற்றப்படுத்தி, அவர்களை நோக்கி, இதோ கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில், இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங்காலம் வருகிறது. அவர்களுடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டு வரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்த நாளிலே அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப்போல இது இருப்பதில்லை. அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலைநிற்கவில்லையே. நானும் அவர்களைப் புறக்கணித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எபிரெயர் 8 : 7-9)

அந்த நாட்களுக்குப் பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது, என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் அவைகைள எழுதுவேன் நான் அவர்கள் தேவனாயிருப்பேன் அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். (எபிரெயர் 8 : 10-12)

புது உடன்படிக்கை என்று அவர்ெ சால்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள் பட்டதுமாயிருக்கிறது உருவழிந்து போகக் காலம் சமீபித்திருக்கிறது. (எபிரெயர் : 8-12)

முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம் (ரோமர் 6:17)

ஆதலால் விசுவாசம் வருகிறதற்கு முன்னே வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு முன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப்பிரமாணத்தின்கீழ் காவல் பண்ணைப்பட்டிருந்தோம். இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப் பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம்

உபாத்திக்குக் கீழானவர்களல்லவே. (காலத்தியர் 3 : 23-25)

உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடேகூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து, நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளில் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து, துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார். (பொலோசெயர் 2 : 13,14,15)

தேவனுடைய மிக்க அன்பு மற்றும் அவருடைய கிருபையின்மூலம் நமக்கு அவருடைய குமாரனுடைய மாசற்ற இரத்தத்தினாலே பலியைச் சமர்ப்பிக்கபட்டன. கிறிஸ்துவினுடைய மரணத்தின் புதிய ஏற்பாடு ஏற்படுத்தி, அவருக்கு கீழ்ப்படிந்த மனந்திரும்புதல் பெற்று மற்றும் அவர்களுடைய பாவத்திலே இருந்து மன்னிப்பை பெறுவதற்கு நமக்கு வாய்ப்பு அளித்திருக்கிறார் (எபிரெயர் 9 : 16-28)

அதனால் சுயாதீனப் பிரமாணத்தினால் நியாயத் தீர்ப்படையப் போகிறவர்களாய் அதற்கேற்றபடி பேசி, அதற்கேற்றபடி செய்யுங்கள். ஏனென்றால், இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும். நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும். (யாக்கோபு 2 : 12,13)

**கேள்விகள் :**

1. தேவன் மோசேவை அழைத்து மலையின்மேல் பத்துக் கட்டளைகள்

............................யூதர்களுக்கும் மற்றும் அந்நியர்களுக்கும் கொடுத்தார்.
............................நித்தியமும் இருப்பதற்கு இஸ்ரவேலர்களுக்கே கொடுத்தார்.
............................புதிய ஏற்பாட்டின்படி புதுபிக்கும் வரைக்கொடுத்தார்.

2. பத்துக் கட்டளைகள் அதாவது நியாயப்பிரமாணம், விசுவாசத்தின் அண்டையில் நம்மை உபாத்தியத் தண்டையில் சேர்க்கிறது.

............................ஆம்
............................இல்லை

3. உலகம் முதன்முதலாக பெற்ற ஏற்பாட்டுக்கு பதிலாக இரண்டாம் ஏற்பாடு என்று அதை அழைக்கின்றோம்?

............................புதிய ஏற்பாடு
............................பழைய ஏற்பாடு
............................இரண்டு ஏற்பாடுகள்

4. மோசேயின் நியாயப்பிரமாணம் பாவ மன்னிப்புக்காக கொடுக்கப்பட்டிருக்கின்றன.

............................ஆம்
............................இல்லை

5. தேவன நியாயப்பிரமாணத்தை கிறிஸ்தவின் மரணத்தில் சிலுவையில் ஆணியடிப்பது. அதன்மேல் துடைத்துப்போட்டார்.

............................ஆம்
............................இல்லை.

## தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவன்
## 1 சாமுவேல் - 16, 2 - சாமுவேல் 7

### பாடம் - 9

எகிப்து அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப்பெற்று மற்றும் பாலும், தேனும் ஓடுகிற தேசத்தை சுதந்தரித்துக் கொண்டபிறகு, தேவன்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நியாயாதிபதிகள் இஸ்ரவேலர்களை அரசாண்டார்கள். இருந்தும் மற்றும் தேசத்தைப்போல் இருப்பதற்கு இஸ்ரவேலர்கள் விரும்பினார்கள். தேவன் அவர்களுக்கு ராஜாவாக இருப்பதற்கு அவர்கள் தேவனை புறக்கணித்தார்கள். அதனால் தேவன் அவர்களுக்கு ராஜாவாக இருக்கும்படி சவுல் என்பவரைக் கொடுத்தார். ஜனங்கள் எப்படி விரும்பினார்களோ அப்படி போல அவன் அவர்களை வழிநடத்தினான். தேவனுக்கு கீழ்ப்படிந்த ஊழியக்காரனாக இல்லாமல் தன் சொந்த ஆலோசனையின்படி அரசாண்டான் அதனால் தேவன் அவரை தள்ளிவிட்டு சாமுவேலை அனுப்பி தேவனுக்கு கீழ்ப்படிந்தவனான தாவீதை அபிஷேகம் பண்ணுங்கள் என்றார். சவுல், தாவீதுவை ஒரு சாதாரண பகைவனாக துரத்தி கொள்ளுவதற்கு தேடிக் கொண்டிருக்கும்போது, அவனிடத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு தாவீது ஓடிப் போகவேண்டியதாயிருந்தது. இருந்தாலும் தேவன் மூலம் அபிஷேகம் பண்ணப்பட்டவரை எண்ணி தாவீது, சவுலுக்கு எந்த தீங்கும் செய்யவில்லை. சவுல் மரணமடைந்தபின் தாவீது ராஜாவானான். தாவீதைப் பற்றி தேவன் இப்படிச் சொன்னார். பின்பு அவர் அவனைத் தள்ளி, தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தி, ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன். எனக்குச் சித்தமானவைகளை யெல்லாம் அவன் செய்வான் என்று அவனை குறித்து சாட்சியுங் கொடுத்தார். (அப்போஸ்தலர் 13 : 22-23)

ஒரு சந்தர்ப்பத்திலே தாவீது மற்றும் அவனுடைய மனிதர்களை மிகவும் ஐஸ்வர்யம் மிக்க சமூகத்தில் இருந்தனர் மற்றும் அவர்கள் அவரை இரட்சித்து, மிகவம் கௌரவமாக பார்த்துக் கொண்டிருந்தார்கள். எந்த விதத்திலும் அவனுடைய ஊழியக்காரர்களுக்கு உடயவைகளை எடுத்துக் கொள்ளாமல் இருந்தார்கள். பிறகு, தாவீது, அவர்களுடைய மனிதர்கள் பசியாக இருக்கும்பொழுது, தாவீது உணவுக்காக நாபாலுடைய உதவிக்காக விண்ணப்பம் பண்ணினான். இரந்தும் நாபாலு, அவருடைய காரியங்கள் அறிந்தும், அவமானப்படுத்தி மற்றும் உடனுக்குடன் அவனுடைய விண்ணப்பத்தை புறக்கணித்தான். தாவீது கோபமடைந்தான். அவனை கொள்ள வேண்டும் என்று நினைத்தான். ஆனாலும் மனம் திரும்புதல் பெற்றான். தேவனே அவருக்கு தீர்ப்பு கொடுக்க வேண்டும் என்று நினைத்தார்.

தாவீது வாழ்க்கையில் எல்லா காரியங்களிலும் தய்வீகமானவைகள் அல்ல, சேனைகளோடே யுத்தத்திற்கு கலந்து போகாமல் வீட்டிலேயே இருந்தார். அப்பொழுது ஒரு அழகான பெண்ணைப் பார்த்து அவளிடம் விபச்சாரம் செய்தான். அவன் மூலம் அவள் கற்பம் தரித்தாள் என்று அறிந்து, தன் பாவத்தை ஒத்துக் கொள்வதற்கு, அவளுடைய புருஷனைக் கொள்வதற்கு சேனைகளுக்கு கட்டளைக் கொடுத்தான். எவளவு கொரம்? ஆம் அது தேவனை சந்தோஷப்படுத்துவதா? இல்லை தாவீது சரீர சம்பந்தமான இச்சையைத் தீர்த்துக் கொள்வதற்கு அந்த இச்சையின்படி இழுக்கப்பட்டான். சோதனையில் விழுந்தான். அது பாவத்திற்கு காரணமாயிருந்தது. இந்த பாவத்தின் நிமித்தம் தாவீது மிகவும் வருத்தப்பட்டான். தேவனுடைய ஊழியக்காரனாகிய நாதரன் எதிர்ப்பட்டபோது, அவன் தன் கேட்டத்தன்மையை ஒத்துக் கொண்டு, மனம் திரும்பி மன்னிப்புக் கேட்டான். அவன் மன்னிப்படைந்தாலும், இன்றும் அந்த பாவ காரியத்தின் பலன் அநுபவித்துக்

கொண்டே இரக்கின்றான். என் இருதயத்துக்கு ஏற்றவன், என்று தேவன் தாவீதை பற்றி சொல்வதினாலே அவனுடைய இருதயத்தின் கிரியைகள், அவரை வேதனைக்கு மற்றும் தேவனிடம் மன்னிப்பு கேட்கும்படிக்கும், தேவனிடம் சமாதானப்படுவதற்கும் அவனுடைய இச்சையின்படி தேவன் தன்னுடைய இருதயத்தின் ஏற்றவன் என்று சொன்னார். இன்று ஒவ்வொரு நிலமையும் அப்படித்தான். நாமனைவரும் பாவம் செய்தோம் பாவத்தின்படி நம்முடைய கிரியை மாற்றிக்கொண்டு, மற்றும் தேவனிடம் சமாதானப்படுவது தேவையாக இருக்கின்றது. அவருடைய ராஜ்ஜியத்திற்கு அழிவு இருக்காது என்று, இயேசு கிறிஸ்து தீர்மானம் பண்ணி தாவீதிடம் அவருடைய சந்ததியிலிருந்து ஒருவர் அவருடைய சிங்காசத்தின் மேல் நித்தியமும் உட்கார்வார் என்று தேவன் வாக்குத்தத்தம் பண்ணினார்.

தாவீது மற்றும் ஆபிரகாமிடம் தேவன் செய்த வாக்குத்தத்தம் கிறிஸ்து, பாவமில்லாமல், தேவனுக்கு கீழ்ப்படிந்தவனாக, நமக்காக தன் ஜீவனைக் கொடுத்தார். இப்படி கிறிஸ்து பரலோகத்திலிருந்து பூலோகத்திற்கு சரீர ரூபத்தில் வந்து, மனுஷகுமாரனாய் தேவனுடைய பரிசுத்தராக உலகத்தில் வாழ்ந்து தாவீது குமாரனாக அழைக்கப்பட்டு தேவனுடைய திட்டத்தில் வேலையை பூமியின்மேல் நடப்பித்து தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றினார்.

## கேள்விகள் :

1. சவுலை தேவன் இஸ்ரவேலர்களுக்கு ராஜாவாக நியமனம் செய்ததினால், தாவீது அவருக்கு தீங்கு செய்வதற்கும் மற்றும் அவருக்கு கெடுதல் பண்ணினால் தேவனை கௌரவப்படுத்தினதுபோல் என்று நினைத்தார்கள்.

........................ஆம்
............................இல்லை

2. தேவனுடைய இருதயத்திற்கேற்றவன் என்பதன் பொருள்?
............................ தேவனுடைய நியமங்களை மற்றும் கட்டளை போதிக்கிறவன்.
............................ தேவனுடைய ஜனங்களை வழிநடத்துவதில் பலமானவன்.
............................நல்லவைகளை செய்வதற்கு பிரியப்பட்டு மற்றும் அவன் செய்த பாவ காரியங்களை சரிசெய்து கொண்டவன்.

3. தாவீது நமக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு.
............................ஒரு பலமான ராஜா
............................பாவமில்லாமல் தாவீதின் குமாரனாக இயேசு அழைக்கப்பட்டது போல் அவன் பாவம் செய்யவில்லை.
............................பின்பு மனம் திரும்பி மற்றும் அவனுடைய பாவத்தின் நிமித்தி தேவன் மன்னிப்பு கேட்டான்.

4. தாவீதுனுடைய வேலைகளில் தேவன் பிரியமாயிருந்தான்.
............................ஆம்
............................இல்லை

5. இயேசு பூலோகத்திலே இருக்கும்பொழுது தன்னைத்தான் யாருடைய குமாரனாக தெரியப்படுத்தப்பட்டன?

............................தேவனுடைய குமாரன், மனுஷகுமாரன்

............................மரியாள்............... யோசேபின் குமாரன்

............................ராஜாக்களின் குமாரன்

## தீர்க்கதரிசனங்கள் - நிறைவேறுதல்

## பாடம் - 10

பிதாக்களின் காலம் என்று அழைக்கப்படுகின்ற காலங்களிலே தேவன் ஆதாம், றோவா, ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபுவிடம் நேராக பேசினார். இஸ்ரவேலர்கள் ஜனங்களை நிலைநிறுத்தும்பொழுது மோசே, யோசுவா மற்றும் அவர்களுடைய நியாயாதி பதிகளிடத்திலே பேசினார் சாமுவேல் நியாயாதிபதியாக இந்த காலங்களிலே இஸ்ரவேலர் ராஜாக்கள், மற்ற ராஜாக்களைப் போல் அவளுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று எதிர்த்து நின்றார்கள். தேவன் அவர்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தினார். ராஜாக்கள் அரசாங்கம் காலத்தில் தேவன் தன் செய்தியை சில மனிதர்கள் மூலம் பேசினார். அவர்களை தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்படுகின்றனர். தீர்க்க தரிசிகள் எல்லாரும் தேவனுடைய ெ சய்தியை இஸ்ரவேலர் ஜனங்களுக்கு தெரியப்படுத்தினார்கள். ஆனால் அநேக நூற்றாண்டுகாலங்களிலே அநேக தீர்க்கதரிசிகள் மூலம் அதாவது சுமார் 50-க்கு மேலான தீர்க்க தரிசனங்கள் மேசியாவை பற்றி சொல்லப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் இயேசுவின் மூலம் நிறைவேறப்பட்டன. புதிய ஏற்பட்டிலே, நிறைவேறின தீர்க்கதரிசனங்களில் சிலவற்றை கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

### தீர்க்க தரிசனங்கள்

மல்சியா 3 : 1 இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன். அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம்பண்ணுவான்; அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார். இதோ, வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

ஆதியாகமம் 49 : 10 சமாதான கர்த்தர் வருமளவும், செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதும் இல்லை, நியாயப் பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை; ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்.

எபிரேயா 23 : 5

இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழுப்பப் பண்ணுவேன், அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரிகம் பண்ணின பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்.

ஏசாய் - 7 : 13

அப்பொழுது ஏசாயா : தாவீதின் வம்சத்தாரே; கேளுங்கள்; நீங்கள் மனுஷரை விசனப்படுத்துகிறது போதாதென்று என் தேவனையும் விசனப்படுத்தப் பார்க்கிறீர்களோ?

மீக்கா 5 : 2, எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேல் ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார். அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது.

சகரியா 9 : 9 – சீயோன் குமாரத்தியே மிகவம் களிகூட்டு. எருசலேம் குமாரத்திலே, கெம்பீரி, இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார். அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிற வரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின் மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிற வருமாயிருக்கிறார்.

ஏசாயா 53 : 5 – நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

ஏசாயா 53 : 7 – அவர் நெருக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் இருந்தார். ஆனாலும், தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டை போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.

ஏசாயா 53 : 9 துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக் குழியை நியமித்தார்கள். ஆனாலும், அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார். அவர் கொடுமை செய்யவில்லை. அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை.

## நிறைவேற்றம்

மத்தேயு 2 : 2 யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள்.

லூக்கா : 3 : 33 நகசோன் அம்மினதாயின் குமாரன், அம்மினதாம் ஆராமின் குமாரன், ஆராம் எஸ்ரோமின் குமாரன்; எஸ்ரோம் பாரேசின் குமாரன், பாரரேஸ் யூதாவில் குமாரன், யூதா யாக்கோபின் குமாரன்.

மத்தேயு : 1 : 18 – இயேசு கிறிஸ்துவினுடைய ஜெதநத்தின் விவரமாவது. அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடி வருமுன்னே, அவள் பரிசுத்த ஆவினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது.

மத்தேயு – 11 ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதுவின் குமாரனான இயேசு கிறிஸ்து வினுடைய வம்ச வரலாறு.

மத்தேயு 21 : 6-7. சீஷர்கள் போய், இயேசு தங்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்து, கழுதையையும், குட்டியையும் கொண்டுவந்து, அவைகள்மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டு அவரை ஏற்றினார்கள்.

மத்தேயு 27 : 26. அப்பொழுது, அவர் பரபாசை அவர்களுக்கு விடுதலையாக்கி, இயேசுவையே வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக் கொடுத்தார்.

மத்தேயு : 27 : 12-14 பிதான ஆசாரியரும் மூப்பரும் அவர்மேல் குற்றஞ்சாட்டுகையில், அவர் மாலுக்கரம் ஒன்றும் சொல்லவில்லை அப்பொழுது, பிலாந்து அவரை நோக்கி, இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே, நீ அவைகளைக் கேட்கவில்லையா என்றான். அவரோ ஒரு வார்த்தையும் மாறுத்தரமாகச் சொல்லவில்லை. ஆனால் தேசாதிபதி மிகவும் ஆச்சரியப்பட்டான்.

மத்தேயு : 27 : 57 - 58. சாயங்காலமானபோது, இயேசுவுக்குச் சீஷனும் ஐசுவரியவனுமாயிருந்து லோசேப்பு என்னும் பேர் கொண்ட அரிமத்தியர் ஊரானாகிய ஒரு மனுஷன் வந்து, பிலாந்து வினிடத்தில் ரூபாய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான். அப்பொழுது, சரீரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டாள்.

மத்தேயு : 27 : 50 - இயேசு, மறுபடியும், மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஆவியை விட்டார்

கேள்விகள் :

1. விவேிப்பவரை பற்றி எந்த தீர்க்கதரிசனங்களும் இல்லை

..............................ஆம்
..............................இல்லை

2. மேசியாவை பற்றி ஏசாயா மற்றும் மற்றும் சிலர் தீர்க்க தரிசிகள்கூட தீர்க்கதரிசனம் உரைத்தார்கள்.
..............................ஆம்
..............................இல்லை.

3. நசரேனாகிய இயேசு கிறிஸ்துவுக்குள் நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள்
..............................மல்கிய 6 : 10
..............................யாத்திராகமம் 10 : 15
..............................ஏசாயா 53 : 5
..............................ஏசாயா 2 : 19

4. ஆதாம், நோவா, ஆபிரகாம் மற்றும் தாவீதுடன் தேவன் நேராக பேசினார்
..............................ஆம்
..............................இல்லை

5. தேவன் ராஜாங்களின் மூலம் தீர்க்கதரிசிகளிடம் தன்னுடைய செய்தியை தெரிய்படுத்தினார்.
..............................ஆம்
..............................இல்லை.